# முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

**முன்னிலை : திருமதி. A. முத்துசாரதா, B.L., P.G.D.P.M.**
**முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்**

2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19 ம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண்.48/2020-ல் இ.ம.எண். 4/2025**

1. திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், பாலகிருஷ்ணாபுரம் அஞ்சல், ராமர் காலணியில் வசித்து வந்து தற்போது திருநகர், முதல் குறுக்கு தெரு, MSP பள்ளி எதிர்புரம், கதவு எண்.6A ல் வசித்து வரும் வெள்ளைச்சாமி அவர்களின் மகன் சுமார் 65 வயதுள்ள S.V. சேதுராமன்

2. திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், பாலகிருஷ்ணாபுரம் அஞ்சல், ராமர் காலணியில் வசித்து வந்து தற்போது திருநகர், முதல் குறுக்கு தெரு, MSP பள்ளி எதிர்புரம், கதவு எண்-6A ல் வசித்து வரும் S.V. சேதுராமன் அவர்களின் மனைவி சுமார் 60 வயதுள்ள S. காளீஸ்வரி

................. மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள்

/ எ தி ர் /

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் டவுன், தொழிற்பேட்டை குடியிருப்பு, கதவு எண்-6/15, ல் குடியிருக்கும் RM. மெய்யப்பன் அவர்களின் மகன் M.மெய்யப்பன்

**............. எதிர்மனுதார்/வாதி**

மனுதாரர் தரப்பில் 3.8.2019 ம் தேதி முதல் 20.3.2020 ம் தேதி வரை வரவுகளை காட்டக்கூடிய மூன்று நோட்டுக்களை பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களாக ஏற்றுக்கொண்டு பி.வா.சா.ஆ 1 முதல் பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்ய அனுமதியளிக்க உத்தரவிடக்கோரி உ.வி.மு.ச. கட்டளை 8 விதி 1(A) (3) கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் – 04.06.2025

இம்மனு என் முன்னர் 10.9.2025ம் நாளன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. E. ரகுராமன் அவர்களும், எதிர்மனுதார்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. C. ஸ்டான்லி மனோகரன் அவர்களும் முன்னிலையாகியும் மனு உரை, எதிருரை மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இம்மன்றத்தால் பிறப்பிக்கப்படும் :

**உத்தரவாணை**

1. இம்மனு அனுமதிக்கப்படுகிறது.
2. செலவுத்தொகை ஏதுமில்லை.

**பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களாக பி.வா.சா.ஆ 1 முதல் பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்ய வேண்டிய ஆவணப்பட்டியல்**

| வ.எண் | தேதி | தன்மை | ஷரா |
|---|---|---|---|
| 1. | 03–08–2019 | 03–08–2019 முதல் 22–01–2020 வரை வரவினை காட்டக்கூடிய குறிப்பு நோட்டு | அசல் |
| 2. | 16–09–2019 | 16.09.2019 முதல் 20–03–2020 வரை வரவினை காட்டக்கூடிய குறிப்பு நோட்டு | அசல் |
| 3. | 25–11–2019 | 25–11–2019 முதல் 20–03–2020 வரை வரவினை காட்டக்கூடிய குறிப்பு நோட்டு | அசல் |

**2025ம்** ஆண்டு செப்டம்பர் திங்கள் 19 ஆம் நாள் என்னால் கையொப்பம் இடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையைப் பதித்து வழங்கப்பட்டது.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.10.23 15:54:19 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
திண்டுக்கல்
<u>I.A.No.4/2025 in O.S.No.48/2020</u>
உத்தரவாணை
நாள் 19.09.2025